Centre for Climate Change and Sustainability
Ashoka University

# 3CS மீடியா பெல்லோஷிப் (3CS Media Fellowship)
## விளிம்புநிலை சமூகங்களின் காலநிலை ஊடகவியல்

3CS மீடியா பெல்லோஷிப் இந்தியாவின் காலநிலை மாற்றம் சம்மந்தமான செய்தி அறிக்கைகளை ஆதரிக்கும் ஒரு நிறுவனம், காலநிலை மாற்றம் மக்களின் வாழ்க்கையை குறிப்பாக இந்திய சமூகத்தில் விளிம்புநிலையில் வாழும் மக்களை எவ்வாறு பாதிக்கிறது என்பதை புரிந்துக்கொள்ள இந்த நிறுவனம் உதவுகிறது.

இதனடிப்படையில் கள நிருபர்களுக்கு தேவையானவைகள் கிடைக்கும் பட்சத்தில் காலநிலை மாற்றத்தை குறிக்கும் பொது விவாதத்தை ஏற்படுத்தக் கூடிய வகையில் எவ்விதமான உள்ளடக்கத்தை அவர்கள் தேர்ந்தெடுப்பார்கள்?

காலநிலை மாற்றம் மிகவும் பின்தங்கிய மக்களின் அன்றாட வாழ்க்கையை எவ்வாறு பாதிக்கிறது?

விளிம்புநிலை சமூகங்களின் வாழ்வியல் நலம் மற்றும் வாழ்வாதாரத்தை நீண்ட காலத்திற்கு காலநிலை மாற்றம் எவ்வாறு பாதிக்கும்?

இந்த கேள்விகளை செய்திகளாக ஆவணப்படுத்துவதில் ஆர்வம் கொண்ட பின்தங்கிய சமூகங்களை சார்ந்த ஊடகவியலாளர்களை 3CS மீடியா பெல்லோஷிப் நிறுவனம் நேரடியாக ஊக்கமளிக்கிறது.

மீடியா பெல்லோஷிப்பின் அடுத்தடுத்த பதிப்புகளில் பல புவியியல் சார்ந்த பகுதிகளை உள்ளடக்க முடியும் என்று நாங்கள் நம்புகிறோம், இந்த குறிப்பிட்ட தொகுதியானது தீபகற்ப இந்தியாவில் காலநிலை மாற்றத்தின் பாதிப்புகளில் முன்னணியில் இருப்பவர்களையும் மற்றும் அவர்களால் மையப்படுத்தி உருவாக்கபட்ட அறிக்கைகளின் மீது கவனம் செலுத்துகிறது.

உதவித்தொகை:

நான்கு பத்திரிக்கையாளர்களுக்கு 3CS பெல்லோஷிப் சார்பாக உதவித்தொகை வழங்கப்படும். பழங்குடியினர் மற்றும் தலித் சமூகங்களை சார்ந்த பத்திரிக்கையாளர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

பெல்லோஷிப் உதவித்தொகையாக ஒவ்வொருவருக்கும் கீழுள்ள அட்டவணையைப் பின்பற்றி ரூ. 4,00,000 வழங்கப்படும்:

| | |
|---|---|
| ஏப்ரல் 1 | ரூ. 2,00,000 (தேர்வானவுடன்) |
| மே 31 | தொகுக்கப்பட்ட தற்போதைய முன்னேற்றமடைந்த அறிக்கையை சமர்பிக்க வேண்டும் (கொடுக்கப்பட்ட தொகைக்கான செலவு கணக்குகளை நிறுவனத்தின் பதிவுக்காக தர வேண்டும்) |

| | |
|---|---|
| செப்டம்பர் 1 | ரூ. 1,00,000 (அறிக்கை சம்மந்தமான உள்ளூர் பயணத்திற்குப் பிறகு கதையின் இறுதிக்கட்டக் கருத்து வடிவத்தை சமர்பிக்க வேண்டும்) |
| நவம்பர் 1 | ரூ. 1,00,000 (அறிக்கையின் மொழிபெயர்ப்புடன் இறுதிப் பதிப்பு மற்றும் கணக்குகளை முழுமையாக சமர்பிக்க வேண்டும்) |

பெல்லோஷிப் காலம்: ஏப்ரல் 1 - நவம்பர் 30 2022.

| அறிக்கையை சமர்ப்பிக்கும் காலம் & கடைசி நாள் : ஏப்ரல் 1 - செப்டம்பர் 30 2022. | |
|---|---|
| ஆகஸ்ட் 31 | கதையின் இறுதிக்கட்டக் கருத்து வடிவத்தை சமர்ப்பித்தல் (500 சொற்கள்) |
| செப்டம்பர் 30 | இறுதிப் பதிப்பை சமர்ப்பித்தல் |
| மொழிபெயர்ப்பு + மதிப்பீடு: அக்டோபர் 1 - டிசம்பர் 31 2022 | |
| அக்டோபர் 1 - அக்டோபர் 31 | மொழிபெயர்த்தல் |
| அக்டோபர் 15 - நவம்பர் 15 | தனிக்குழு மதிப்பீடு |
| வெளியீடு: குழு மதிப்பீட்டிலிருந்து மூன்று மாதங்களுக்குள் | |

விண்ணப்பிக்கும் தேதி : பிப்ரவரி 1 - மார்ச் 15 2022.

பத்திரிகையாளர்கள் காலநிலை மாற்ற அறிக்கை சம்மந்தமான ஒரு பக்க முன்மொழிவுடன் விண்ணப்பிக்க வேண்டும்.

முன்மொழிவுக்கு தேவையானவைகள்: பத்திரிகையாளர்கள் தங்கள் விண்ணப்பங்களை பின்வரும் ஆவணங்களுடன் 3cs.mediafellowship@ashoka.edu.in என்ற முகவரிக்கு 'Application for 3CS Media Fellowship' என்ற தலைப்பில் அனுப்பலாம்.

- அதிகம் கேட்டிராத குரல்களுக்கு சொந்தக்காரர்களான ஒடுக்கப்பட்ட மக்களின் பார்வையிலிருந்து, காலநிலை மாற்றம் அவர்களையும் அவர்கள் வாழ்விடத்தையும் எவ்வாறு பாதிக்கிறது என்பதை ஐந்து கதை கருக்களாக குறிப்பிட வேண்டும். இவை களத்தில் உள்ள பலதரப்பட்ட கூறுகளை ஆழமாகப் பார்க்கும் கதைகளின் தொடராக இருக்கலாம் அல்லது முற்றிலும் மாறுபட்ட

கதைக் கருத்துகளாகவும் இருக்கலாம். இறுதியில் அவை 1000 வார்த்தைகளுக்கு குறையாமல் வெளியிடப்படக்கூடிய தொகுதிகளாக அமைய வேண்டும்.

- அனைத்து ஒருங்கிணைப்புகளையும் உள்ளடக்கிய விண்ணப்பதாரரின் CV மற்றும் அவர்களால் முன்னர் வெளியிடப்பட்ட அறிக்கையின் இரண்டு மாதிரிகள்.
- ஒரு அடையாளச் சான்று.

விண்ணப்பதாரர்கள்:

- தென்னிந்தியாவின் பகுதிகளான கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், தெலுங்கானா மற்றும் பாண்டிச்சேரி, லட்சத்தீவு மற்றும் அந்தமான் & நிக்கோபார் தீவுகள் ஆகிய யூனியன் பிரதேசங்களில் இருந்து செய்தி அறிக்கைகளை வெளியிடும் விளிம்புநிலை சமூகத்தைச் சேர்ந்த பத்திரிகையாளர்கள்.
- பழங்குடியினர் மற்றும் தலித் பத்திரிகையாளர்களுக்கு முன்னுரிமைஅளிக்கப்படும்.
- பெண்கள் விண்ணப்பிக்க ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

விண்ணப்பங்களை மதிப்பிடுபவர்கள்: மூன்று உறுப்பினர்களைக் கொண்ட தனிக்குழு - ஊடகக் கூட்டாளர்களின் இரண்டு பிரதிநிதிகள் மற்றும் Centre for Climate Change and Sustainability-இல் இருந்து (3CS) ஒரு உறுப்பினர் - முடிவெடுக்கும் அமைப்பாக இருக்கும். இவைக் குறித்த மேலும் தகவல்கள் விரைவில் வெளிப்படையாகப் பகிரப்படும்.

சமர்ப்பிக்கப்பட்ட கதைகளை மொழிபெயர்ப்பவர்கள்: Centre for Climate Change and Sustainability மொழிபெயர்ப்புகளுக்கான ஆதரவை வழங்கும்.

யார் கதைகளை வெளியிடுவார்கள்: Centre for Climate Change and Sustainability, செய்தி அறிக்கைகள் முடிந்தவுடன் அவற்றை வெளியிட ஊடக கூட்டாளர்களுடன் இணைந்து செயல்படும்.

---

பெல்லோஷிப் தொடர்பான அனைத்து கேள்விகளையும் 3cs.mediafellowship@ashoka.edu.in க்கு அனுப்பலாம்.